பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 15 சனிக்கிழமை 29.03.2025 கதிர் 134

இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இலங்கை முழுவதும் பெருமளவில் நிராகரிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான வழக்குகள் 2

# மகாவலி அதிகார சபையை தனியார்மயப்படுத்த முயற்சி

## விவசாயப் போராட்ட அமைப்பு எதிர்ப்பு

ரணில் விக்ரமசிங்கவும் 'நல்லாட்சி'க் காலத்தில் மகாவலி அதிகார சபையை தனியார் மயமாக்க நடவடிக்கை எடுத்திருந்தார். தற்போதைய ஆளும்தரப்பு அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துவருகிறது. ஆளும்தரப்பின் இந்தத் தீர்மானத்தை நாங்கள் முற்றாக எதிர்ப்போம் என விவசாய போராட்ட அமைப்பின் தேசிய அமைப்பாளர் விமல் வத்துஹேவா தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை மூடிவிடவோ அல்லது தனியார் மயமாக்கவோ ஆளும்தரப்பு எடுத்துவரும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாய போராட்ட அமைப்பு நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியது. அங்கு கருத்துத் தெரிவித்த வத்துஹேவா மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்புக்குச் சொந்தமான 166 வணிகம் சாராத நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வு அறிக்கை ஒன்று மார்ச் 17 அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிறுவனங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது. இந்த நிறுவனங்களில் விவசாயத் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்கள் உள்ளன. மகாவலி அதிகாரசபை, முந்திரிக் கூட்டுத்தாபனம், நெல் சந்தைச் சபை போன்ற பல முக்கிய நிறுவனங்கள் இந்தப் பட்டியலில் உள்ளன. 8

# அநுரகுமார ஜனாதிபதியானதால் அரச சேவை மாறிவிடவில்லை

## உண்மையை வெளிப்படுத்தும் முஜிபுர் எம்.பி.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றார் என்பதற்காக அரச சேவையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஏனைய ஜனாதிபதிகள் எவ்வாறு அரசியல் நியமனங்களை வழங்கினரோ அதனையே தற்போதைய ஜனாதிபதியும் பின்பற்றுகின்றாரென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

# நடந்தவற்றை கிளறுவதில் அர்த்தம் ஏதுமில்லையாம்

## போதிக்கிறார் கருணா

போரில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லிம்கள் என பல உயிரிழப்புகளை நாம் சந்தித்துள்ளோம். இருப்பினும் நடந்தவை நடந்தவைதான். அந்த விடயங்களை மீண்டும் கிளருவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இனங்களுக்கிடையே முரண்பாடுகள்தான் தோற்றுவிக்கப்படும். வருகின்ற சந்ததிக்காக ஒரு புதுயுகத்தை நாம் அமைத்துக் கொடுக்கவேண்டும் 2

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த இருவர் கைதாகிச் சிறையில்

## 20 பேருக்குப் பிணை கிடைத்தது

நீதிமன்ற உத்தரவை மீறி சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரில் 25 பேருக்கு பிணையில் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்ட நிலையில் ஒன்றிணைந்த சுகாதார மற்றும் விஞ்ஞான பட்டதாரிகள் சம்மேளனத்தின் செயலாளர் மற்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை ஏப்ரல் 4 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நிறைவுக்காண் மருத்துவ ஊழியர்கள், தாதியர் ஆகிய சுகாதார சேவைக்கு சுகாதார மற்றும் விஞ்ஞான பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிறுத்தி வியாழக்கிழமை சுகாதார 2

# மீறல்களில் ஈடுபட்டிருந்தால் படையினராக இருந்தாலும் தண்டிக்கத்தான் வேண்டும்

## திருவாய் மலர்கிறார் சரத் பொன்சேகா ஆனால் சவேந்திர சில்வா நிரபராதியாம்

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தால் இராணுவத்தினராக இருந்தாலும் தண்டிக்கப்படவே ஆக வேண்டும் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிகள் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக பிரித்தானியா விதித்துள்ள பயணத்தடை குறித்து கருத்துத் தெரிவித்தபோது 2

# போர் முடிந்த பின்னர் ஒரு தரப்பு மட்டுமே இலக்கு வைக்கப்படுவதை ஏற்க முடியாது

## ஐ.தே.கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்கவின் கருத்து இது

உள்நாட்டுப் போர் நிறைவடைந்து நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ள நிலையில்இ ஒரு தரப்பினர் மாத்திரம் இலக்கு வைக்கப்பட்டு அவர்கள் மீது தடை விதிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்த விவகாரம் இராஜதந்திர மட்டத்தில் மிகவும் தீர்க்கமாக அணுகப்பட வேண்டியதாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தினார்.

கொழும்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் நிறைவடைந்து நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது. அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து 8

# இளைஞர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜனநாயக உரிமையும்கூட மறுப்பு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

தமக்கு அரச வேலை தரக்கேட்டு ஆளும்தரப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஜனநாயக உரிமையைக்கூட இன்றைய இளைஞர்கள் இழந்துள்ளனர். தற்போதைய ஆளும்தரப்பில் அங்கம் வகிக்கும் குழுவினர் எதிர்க்கட்சியில்



இருந்தபோது போதியளவுக்கு எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தாலும் ஆட்சிக்கு வந்த பின்னர் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான ஜனநாயக உரிமையைக்கூட பறிக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர்களுடன் இன்று (29) இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 8

# மோடியை எப்படி எதிர்கொள்வது? இன்றைய ஜேவிபியின் சிக்கல் இது

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. சுட்டிக்காட்டு

இந்திய எதிர்ப்புக்கொள்கையிலிருந்த ஜேவிபிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையின்போது அவரை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே தற்போது பெரும் நெருக்கடியாகவுள்ளது. இந்தியாவுடனான நட்புறவை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு பதிலாக ஆணவப் பேச்சுக்களால் அதனை சீர்குலைக்கும் வகையிலேயே ஆளும்தரப்புச்



செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்திய உயர் ஆணையகத்தினால் 2

# பிரிட்டனின் தடையை வன்மையாக கண்டிக்கும் தற்றுணிபுகூட இல்லை

## ஆளும்தரப்பைச் சாடுகிறார் சாகர

இலங்கை இராணுவத்தை சர்வதேச அரங்கில் குற்றவாளிகளாக்கும் பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு சார்பாகவே ஆளும்தரப்பு செயற்படுகிறது. பிரித்தானிய அரசு இலங்கை படைகளின் முன்னாள் தளபதிகளுக்கு விதித்த தடையை வன்மையாக கண்டிக்கும் தற்றுணிவு ஆளும்தரப்புக்குக் கிடையாது. இதனால் இலங்கை எதிர்வரும் காலங்களிலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று 2

## இனி இது .....

டசின் கணக்கில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நேற்று அவற்றில் 20 வழக்குகள் விசாரணைக்கு வந்தன.

இந்த வழக்குகளில் இளைஞர்களின் பிறப்புச்சான்றிதழ்களை உறுதிப்படுத்துவதில் காணப்பட்ட பிரச்சினை காரணமாக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது, அதாவது அந்தப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் உதவிப் பதிவாளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படாதபோதும், உண்மைப் பிரதி என்று சமாதான நீதிவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்குமானால், அதனை ஏற்றுக்கொள்வது என்கிற முடிவுக்குத் தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே வந்திருந்தது என்பதை முன்னரே தெரிவித்திருந்தேன் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

நேற்று வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இது குறித்து இரு தரப்பு சட்டத்தரணிகளும் பேசி ஓர் இணக்கப்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்புக்களைப் பரிசீலிக்க நீதிமன்றம் அவகாசம் வழங்கியது. அதற்கேற்ற வகையில் ஏப்ரல் 1ஆம் திகதிக்கு வழக்குகளை ஒத்தி வைத்தது.

வழக்குகளை எதிர்கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் முற்பட்டிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளை வழக்கைத் தாக்கல் செய்த சட்டத்தரணிகளோடும் தேர்தல்கள் ஆணையகத்தின் முடிவெடுக்கக் கூடியவர்களோடும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தி சுமுகமான முறையில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய இணக்கத்தை எட்ட முயற்சிக்கும்படி நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

அந்த முடிவிற்கு பின்னராக வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இந்த வழக்குகள் மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்தாட்சிபடுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை என்று யாழ்ப்பாண தேர்தல் அத்தாட்சி அலுவலர்களால் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட ஒன்பது வழக்குகளும், அதே காரணத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட வழக்கும், மன்னார் மாவட்டத்திலே மாந்தை பிரதேச சபைக்கான மனு நிராகரிக்கப்பட்ட வழக்கும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி, யாழ். மாநகரசபையிலே தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட வழக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கண்டி மாவட்ட வேட்புமனுக்கள் உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்ட வழக்குகள் நேற்றையதினம் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த வழக்குகள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராசா, மஹிந்த சமயவர்தன மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டன. இந்த வழக்குகளில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் முன்னிலையாகியிருந்தார்.

மேற்படி வழக்குகளின் விசாரணையின் போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, இது சம்பந்தமாக சுமுகமான முடிவுக்கு வர விரும்புவதாக மன்றுரைத்தார். அவர் முன்வைத்தவற்றை ஆராய்ந்த பின்னரே நீதியரசர்கள் ஆயம் கலந்துரையாடலுக்கான உத்தரவைப் பிறப்பித்தது.

இதன்படி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான ஜனா- திபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

நாளை நடக்கும் கலந்துரையாடலில் இரு தரப்பினரும் எந்தெந்த வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை முடிவு செய்வார்கள் என்று தெரிகிறது. குறிப்பாக, சமாதான நீதிவானின் கையெழுத்து, சீல், திகதி, இடம் ஆகியன விவரங்கள் சரியாகக் குறிப்பிடப்பட்டு, உண்மைப் பிரதி என உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று உறுதிப்படுத்தமுடிகின்றது. ஆனால், சமாதான நீதிவான் கையெழுத்திடாதமை உள்ளிட்ட வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டவற்றை ஏற்றுக்கொள்வதில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கொள்கையளவில் இணக்கம் இல்லை என்பதால் அது குறித்து நளைய கலந்துரையாடலிலேயே இணக்கம் எட்டப்படவேண்டும்.

அப்படி இணக்கம் காணப்படாத வழக்குகள் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுக்கப்படும். விசாரணை முடியும் வரையும் அந்தந்தப் பிரதேச சபைகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான இடைக்காலத் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளன. தேர்தலுக்கு முன்னர் இந்த வழக்குகளும் முடிவுக்கு வந்தால் பிரச்சினையில்லை. இல்லையேல் வழக்குகள் முடிவடையும் வரை தேர்தல் இடைநிறுத்தப்படும். அத்தகைய இடங்களில் மக்கள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லையே என்று தமது மக்கள் பிரதிநிதிகளுக்காகக் காத்திருக்க வேண்டியவர்களாவார்கள். யாரோ தவறு செய்ய, மக்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டியவர்களாகும் இந்தச் சோதனைக்கு எப்போது முடிவு வரும்?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## எதிர்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கு முன்பாக ஒன்றிணைந்த சுகாதார மற்றும் விஞ்ஞான பட்டதாரிகள் சம்மேளனம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

மேற்படி போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் பட்டதாரிகள் உள்ளிட பலரும் கலந்து கொண்டிருந்தனர். அன்றைய தினம் போராட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டதுடன் அப்பேச்சு தோல்வி அடைந்தமையால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் பாதுகாப்பு கருதி சுகாதார சுகாதார அமைச்சுக்கருகில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். போராட்டம் தொடர்பில் மருதானை பொலிஸார் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்திய நிலையில், நீதிமன்றம் குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு தடைவிதித்தது.

அதற்கமைய, நேற்றுப் பிற்பகல் 6 மணி வரை, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருத்துவமனை சதுக்கம், டீன்ஸ்வீதி, சேரம்வீதி மற்றும் ரீஜண்ட் வீதி ஆகியவற்றைச்சுற்றியுள்ள வீதிகளை மறித்து, சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவமனையின் நுழைவாயிலுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் மற்றும் நடைபவணையில் ஈடுபடக்கூடாது. மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுகாதார அமைச்சிக்கு முன்பாக இருப்பதற்கும் தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எவ்வாறெனினும் நேற்றைய தினம் நீதிமன்ற உத்தரவை மீறி தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒன்றிணைந்த சுகாதார மற்றும் விஞ்ஞான பட்டதாரிகள் சம்மேளனத்தின் செயலாளர், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட 27 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில், 25 பேரை தலா ஒருவருக்கு 10 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதோடு இருவரை விளக்கமறியலில் வைக்குமாறும் பணித்தது.

## மீறல்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

"ஜகத் ஜயசூரிய, வசந்த கரன்னகொட ஆகியோர் போர்க்களத்தின் முன்வரிசையில் நின்று போரிட்டவர்கள் அல்லர். பின்வரிசையில் நின்றவர்கள். போர்க்களத்தின் பின்வரிசையில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அதனை விசாரிக்கவேண்டும்.

நான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தேன். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இவர்களில் இருவரைப் பற்றியும் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் விமர்சித்துள்ளேன்.

அதேபோன்றே போர்க்களத்தின் முன்னரங்கில் நின்று போரிட்ட சவேந்திர சில்வா எதுவித தவறும் செய்யவில்லை என்று உறுதிபட என்னால் கூறமுடியும்" எனத் தெரிவித்தார்.

## பிரிட்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் மீறல் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரித்தானிய ஆளும்தரப்பு முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராகத் தடை விதித்துள்ளது.

அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவே இலங்கை இராணுவத்தினர் சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள். 'நல்லாட்சி' ஆளும்தரப்பே இதற்கான தொடக்கத்தை ஏற்படுத்தியது. 2015ஆம் ஆண்டு நல்லாட்சி ஆளும்தரப்பு நாட்டு மக்களுக்கு அறிவிக்காமலேயே 30 /1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்தது. இந்தத் தீர்மானத்துக்கு அமைய பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 30/1 தீர்மானத்தில் இருந்து விலகினோம். இருப்பினும் அந்த தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் இன்றும் தாக்கம் செலுத்துகின்றன. இலங்கையின் இராணுவத் தளபதிகளுக்கு எதிராக பிரித்தானியா தடை விதித்தமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

பிரித்தானியாவின் ஒருதலைப்பட்சமான செயற்பாடு தொடர்பில் இலங்கை ஆளும்தரப்பு வலுவான எதிர்ப்பினை வெளிப்படுத்தவில்லை. தடை தீர்மானத்தை நிராகரிப்பதாகவோ அல்லது வன்மையாகக் கண்டிப்பதாகவோ அறிவிக்கவில்லை. மிதமான போக்கில் ஆளும்தரப்பு ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது

இலங்கை இராணுவத்தை சர்வதேச அரங்கில் குற்றவாளிகளாக்கும் பிரிவினை வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு சார்பாகவே ஆளும்தரப்பு செயற்படுகிறது. பிரித்தானிய அரசு இலங்கைப் படையினரின் முன்னாள் தளபதிகளுக்கு விதித்த தடையை வன்மையாக கண்டிக்கும் தற்றுணிவு ஆளும்தரப்புக்குக் கிடையாது. எதிர்வரும் காலங்களிலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

போரை முடிவுக்கு கொண்டு வந்ததால் தான் ஜேவிபி இன்று ஆட்சிக்கு வந்துள்ளது என்பதை ஆளும்தரப்பு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இராணுவத்தினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு என்றும் முன்னிற்போம். நாட்டு மக்களும் ஒருபோதும் இராணுவத்தினரை விட்டுக்கொடுக்கப்போவதில்லை - என்றார்.

## அநுரகுமார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் காலங்களில் முறைமை மாற்றம் தொடர்பிலும், அரச சேவையில் குடும்ப நியமனங்கள் தொடர்பிலும் தேசிய மக்கள் சக்தி பெரும் விமர்சனங்களை முன்வைத்தது. தமது ஆட்சியில் தகுதிக்கு ஏற்ற நியமனங்களே வழங்கப்படும் என்றும் கூறினர். இவ்வாறு அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை அவர்களே மீறியுள்ளனர்.

முக்கிய அரசபதவிகளில் ஆளுந்தரப்பினரின் உறவினர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமின்றி இராஜதந்திர நிமனங்களும் இவ்வாறே காணப்படுகின்றன. தற்போதைய ஆளும்தரப்பால் வெளிநாடுகளுக்கான பதவிகளுக்காக 14 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த நியமனங்களில் ஒருவரைத் தவிர வேறு எவரும் தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கப்படவில்லை.

தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் மேடைகளில் பரப்புரைகளை மேற்கொண்ட ஒருவர் வெளிநாடொன்றுக்கு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான அரசியல் ரீதியான நியமனங்களாலேயே நாடு வீழ்ச்சியடைந்தது என்பதே தேசிய மக்கள் சக்தியின் வாதமாகக் காணப்பட்டது. ஆனால் அவர்களும் தற்போது அதனையே செய்கின்றனர்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றார் என்பதற்காக அரசசேவையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஏனைய ஜனாதிபதிகள் எவ்வாறு அரசியல் நியமனங்களை வழங்கினரோ அதனையே தற்போதைய ஜனாதிபதியும் பின்பற்றுகின்றார். அரசியல்வாதிகளின் கைகளிலுள்ள அதிகாரம் மக்களிடம் வழங்கப்படவேண்டும் என்ற பரப்புரையின் ஊடாகவே தேசிய மக்கள் சக்தி மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டது. ஆனால் அதற்கு முரணான நிர்வாகமே இடம்பெற்று வருகிறது. முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் வெளிநாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது முற்றுமுழுதாக சட்டத்துறையில் அரசியல் செல்வாக்கினைக் காண்பிக்கிறது - என்றார்.

## மோடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2044இல் 30 ரில்லியன் டொலர்கள் பொருளாதாரத்தை அடைவதே இந்தியாவின் இலக்காகும். உலகில் மிக வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடு இந்தியாவாகும். ஆனால் அத்தகைய இந்தியாவுடன் பலமான உறவை அமைத்துக்கொள்ள முடியாது போயுள்ளது. இந்தியாவுடன் மாத்திரமின்றி ஏனைய நாடுகளுடனும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தவேண்டும்.

இந்திய எதிர்ப்புக்கொள்கையிலிருந்தவர்கள், இந்தியாவுக்கு எதிராக மனிதப் படுகொலைகளைச் செய்தவர்கள் தற்போது பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றனர். அடுத்த வாரம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு வருகை தரும்போது அவருடன் எப்படிச் சென்று எவ்வாறு சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைப்பது என்பதே அவர்களுக்குள்ள தற்போதைய பிரச்சினையாகும்.

பொருளாதார ரீதியிலான இராஜதந்திர உறவுகளிலிருந்து விலகி, ஆணவம் கொண்ட பேச்சுக்களால் தற்போது இந்தியாவுடனுள்ள நட்புறவையும் பகைத்துக்கொள்ளும் செயற்பாடுகளையே ஆளும்தரப்பு முன்னெடுத்து வருகிறது. மூடிய பொருளாதாரம் கொண்ட சிறிய நாடுகளால் அபிவிருத்தியடைய முடியாது.

இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள்கூட டிரில்லியனுக்கும் அதிக பொருளாதாரத்தைக் கொண்டுள்ளன. எமக்கு மிகவும் அண்மையிலுள்ள தென்னிந்திய மாநிலங்களே இவ்வாறு பொரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளன. எனவே இவற்றிடமிருந்து நாம் பொருளாதார ரீதியில் பயன்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும் - என்றார்.

## நடந்தவற்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிரிட்டனால் தடைவிதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதியமைச்சர் கருணா எனப்படும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஆட்சியில் உள்ள கட்சியும் ஒரு ஆயுதகுழுதான். அவர்களும் விடுதலைக்காகப் போராடியவர்கள்தான். அதனை அவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் இன்று பழிவாங்கும் அரசியலில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வதென்பது ஏற்றுக்கொள்ள இயலாத விடயம்.

இருப்பினும் சிறந்த ஓர் ஆளும்தரப்பை முன்னெடுப்பதற்கு ஊழல் ஒழிக்கப்படபடுவதற்கு இவ்வாறானவர்களைத் தண்டிக்கவேண்டும். ஊழல் செய்வதில் சாணக்கியனும் முக்கிய மானவர். அவரும் கைதுசெய்யப்படவேண்டும்.

பட்டலந்தை வதைமுகாம் பற்றிய அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜேவிபி உறுப்பினர்களும் பல படுகொலைகளை மேற்கொண்டுள்ளார்கள். ஆளும்தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரின்போதும் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றியெல்லாம் நாம் மீண்டும் கிளறுவதன் மூலம் ஒன்றுமே நடக்கப் போவதில்லை -என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் வரிப்பணம் நிரந்தர வைப்புக்கானது அல்ல

## அது மீள மக்கள் நலத் திட்டங்களுக்காக சென்றடைய வேண்டும் என்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி




உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் வரிப்பணம் நிரந்தர வைப்புக்கானது அல்ல. அது மீள மக்கள் நலத் திட்டங்களுக்காக சென்றடைய வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா அலுவலகத்தில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இலங்கை முழுவதும் நடைபெற இருக்கின்றது. இதில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்துடன் மன்றங்களை கைப்பற்றும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது. பொதுமக்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடும் போது அவர்களது கருத்துக்களை பெற முடிகிறது. குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் என்ற எண்ணம் எங்களிடத்தில் உள்ளது.

வன்னி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும். மக்களும் அதற்கான ஆதரவை எங்களுக்கு வழங்குவார்கள் என நம்புகின்றோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றிய கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களை எவ்வாறு நடத்திச் சென்றார்கள் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

வவுனியா மாநகரசபையை கைபற்றியவர்கள் பல உட்கட்டமைப்பு வசதிகள், மக்கள் நலன் னோம்பு திட்டங்களை செய்ய வேண்டிய தேவைகள் காணப்பட்ட போதிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் கஸ்ரப்பட்டு செலுத்தும் வரியை நிரந்தர சேமிப்பில் வைத்து வர்த்தக வங்கிகளின் போலான செயற்பாட்டை செய்து வந்தது ஒரு வேதனைக்குரிய விடயமாகும். அது பிழையான செயற்பாடு.

மக்களிடம் வரிப்பணமாக அறவிடப்படும் பணம் மீண்டும் மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளை திருத்தி மக்களது வரி, மக்களது வாடகை, பெறப்படுகின்ற முற்பணம் அது மக்களுக்கே மீளச் சென்று அவர்களது நலத் திட்டங்களை செயற்படுத்தும் வகையில் நாம் அவற்றை செயற்படுத்துவோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக அறிய முடிகிறது. அது குறித்து நடவடிக்கை எடுப்போம். தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு நாடாளுமன்ற தேர்தலை விட அதிகரித்துள்ளது. அடுத்து வரும் 5 வருடங்களில் மக்களாட்சி இடம்பெறும். ஊழல் ஒழிக்கப்படும். ஊழல்கள், மோசடிகள் விசாரிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்படும். இதனை எதிர்காலத்தில மக்கள் காணக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

100

## மீனவர்களினது பிரச்சினைகளை கேட்டறிந்த கடல்வள அமைச்சர்

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் தேசிய மக்கள் சக்தியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைவாக வியாழக்கிழமை கடற்தொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வியாழக்கிழமை மாலை 5.00 மணி அளவில் மூதூர் பிரதேசத்திற்கு வருகை தந்திருந்தார்.

மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஷன் அக்மிம மற்றும் தேசிய மக்கள் சக்தியின் மூதூர் அமைப்பாளர் எஸ்.கே.சப்ரான் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன் போது கடற்தொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளையும் விரைவில் பெற்று தருவதாக கூறியிருந்தார். அத்துடன் பொதுமக்கள் அவரிடம் மனுக்களையும் வழங்கி இருந்தனர்.







## திருகோணமலை மாவட்டத்தில் வருடாந்த புத்தரிசி பெருவிழா

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் பெரும்போக அறுவடைக்கான 58 ஆவது வருட புத்தரிசி விழா வியாழக்கிழமை உப்புவெளி கமநல சேவைகள் உத்தியோகத்தர் து. தர்சானந்தன் ஏற்பாட்டில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் என். விஸ்ணுதாசன் தலைமையில் உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக ஓய்வு நிலை இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும் கமநல நியாயசபை நீதிபதியும் கே.பி.கெட்டியாராச்சி மற்றும் சிறப்பு விருந்தினராக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தி ருந்தனர்.

இதன் போது, திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் அறுவடையைக் கௌரவிக்கும் முகமாக சட்டிகளில் அரிசி வைக்கப்பட்டு, அவை தேசிய மட்ட புத்தரிசி விழாவுக்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்ட பிரதான பாத்திரத்தில் இடப்பட்டது.

புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் நான்காம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வமத தலைவர்களின் பங்குபற்றலுடன் இவ்விழாவானது மிகவும் கோலாகலமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கு பரிசில்களும் , அதிகாரிகளுக்கு நினைவு சின்னங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இவ்விழாவில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள்,

நீர்பாசன திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், கமநல காப்புறுதி சபை உத்தியோகத்தர், 22 கமநல சேவைகள் நிலையங்களினதும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.







காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எப்போது சாத்தியமாகும் அமைதி?

உள்நாட்டுப் போர் நிறைவடைந்து நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ள நிலையில்இ ஒரு தரப்பினர் மாத்திரம் இலக்கு வைக்கப்பட்டு அவர்கள் மீது தடை விதிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்த விவகாரம் இராஜதந்திர மட்டத்தில் மிகவும் தீர்க்கமாக அணுகப்பட வேண்டியதாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தியிருக்கிறார்.

போர்நிறைவடைந்துநாட்டில்அமைதிநிலைநாட்டப்பட்டுள்ளது என்று அவர் கூறுவதே அபத்தமானது. ஆயுத மோதல்கள் நிறுத்தப்பட்டுள்ளனவே தவிர, நிரந்தர அமைதி ஏற்படவில்லை. இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை. தமிழர்களின் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கை பரிசீலிக்கப்படவில்லை. ஆயுத மோதல்களுக்குக் காரணமான எந்தவொரு விடயத்திற்கும் தீர்வு காணப்படவில்லை. ஆயுத மோதல் நின்றுபோனது மட்டுமே இலங்கையின் அமைதி என்று அர்த்தப்படுத்திவிட முடியாது.

இதற்குமேலும்"அனைத்து இனமக்களும்ஒற்றுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த சூழலில், ஒரு தரப்பினர் மாத்திரம் இலக்கு வைக்கப்பட்டு அவர்கள் மீது தடை விதிக்கப்படுவது பொருத்தமானதல்ல" என்றும் ஒரு சுற்றுப் பொய்யை அவிழ்த்து விடுகிறார் ரவி கருணாநாயக்க. இங்கே ஆயிரக்கணக்கான நாட்களாக பெற்றோர்களும் உறவினர்களும் தமது பிள்ளைகளைத் தேடி வீதிகளில் போராடுகின்றார்கள். காணாமலாக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் தொடர்கின்றன. பௌத்த ஆக்கிரமிப்பையும் சிங்களக் குடியேற்றங்களையும் எதிர்த்து வடக்கு கிழக்கில் ஒவ்வொரு நாளும் போராடவேண்டிய இக்கட்டு நிலைக்குத் தமிழ் முஸ்லிம் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இவையெல்லாம் ரவி கருணாநாயக்கவின் கண்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல் என்று அவர் இதனை வர்ணிக்கின்றார்.

அனைத்துமக்களும்ஒற்றுமையுடன்வாழ்வதற்காகத்தான் பொறுப்புக்கூறலையும் நீதியையும் நிலைநாட்டுங்கள் என்று தமிழர்களும் உலக நாடுகளின் தலைவர்களும் ஐ.நா. போன்ற உலக அமைப்பினரும் வலியுறுத்துகின்றனர். ஆனால், அதைச் செய்வதே முரண்பாடுகளை உருவாக்கும் என்று கூறி ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்கள் பசப்பு வார்த்தைகளால் மக்களை வாக்கூகளுக்காக ஏமாற்ற முயல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஆட்சியில் இருப்பவர்களைநெருக்கீட்டிற்குள்ளாக்கும்உத்தியாகவேனும் இத்தகைய கருத்துக்களை முன்வைப்பதை கட்சிகளும் அரசியல்வாதிகளும் தவிர்க்க வேண்டும்.

இதற்கு முன்னரும் அமெரிக்கா போன்ற நாடுகளால் இவ்வாறு படையினருக்கு எதிராகத் தடை விதிக்கப்பட்ட போதும், அனைத்து இன மக்களும் இணைந்து இலங்கையர்கள் என்ற ரீதியில் அதற்குப் பதிலளித்தனர் என்றும் ரவி தெரிவித்திருக்கிறார். அப்படி எப்போதும் தமிழ் மக்கள் இணைந்து பதிலளித்தனர் என்ற வரலாறு கிடையாது. உள்நாட்டில் நீதி கிடைக்காது என்று தெரிந்தபோது உலக நீதியை எதிர்பார்த்து ஒவ்வொரு நாட்டின் கதவுகளையும் தட்டும் தமிழர்கள் இதுபோன்ற தடைகளை வரவேற்றிருக்கிறார்களே தவிர, அவற்றை எதிர்த்ததில்லை. இனியும் எதிர்க்கப்போவதுமில்லை.

நீதியும் பொறுப்புக்கூறலுமின்றி இலங்கையில் நிரந்தர அமைதியும் இனங்களுக்கு இடையிலான இணக்கமும் சாத்தியமற்றவை. எனவே அதனைக் கொண்டு வருவதற்கு முயலும் உலக அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்ற சிங்கள அரசியல் தலைமைகள் முன்வரவேண்டும். அப்போதுதான் ரவி கருணாநாயக்க சொல்லும் அமைதி சாத்தியமாகும்.

### திருகோணமலை உள்ளாட்சி மன்றங்களுக்கான

# முதல்வர், சபைத் தலைவர் தெரிவு குறித்த தகவல்கள் பொய்யானவை

## குகதாசன் எம்.பி தெரிவிப்பு



(ஹஸ்பர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியால்திருகோணமலை மாநகர சபை முதல்வர், உப்புவெலி பிரதேச சபை தவிசாளர், வெருகல்பிரதேச சபை தவிசாளர் ஆகிய தெரிவுகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டதாக முகநூலில் வெளிவரும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை குச்சவெளி பகுதியின் நாவற்சோலை கிராமத்தில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு புதன்கிழமை மாலை இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில் -

அப்படி எந்தவொரு முடிவுகளும் எடுக்கப் படவில்லை. முகநூலில் வெளிவந்ததாக நீங்கள் கூறுவதும் ஒரு போலியான செய்தியாகத் தான் இருக்க வேண்டும். எந்தவொரு சபையினுடைய தலைவரையும் தமிழரசுக் கட்சியோ அல்லது வேறு எந்த கட்சியோ தெரிவு செய்ய இயலாது. தேர்தல் முடிவடைந்த பின்பு அந்த சபையில் தெரிவு செய்யப்பட்ட மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களது ஆதரவைப் பெருபவரே சபைத்தலைவராக உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்படுவார் என பள்ளி மாணவர்களே அறிவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது. திருகோணமலை மாநகர சபை பட்டனமும் சூழலும் பிரதேச சபை வெருகல் பிரதேச சபை ஆகிய சபைகளில் ஆட்சியமைப்போம்.

மூதூர், குச்சவெளி ஆகிய பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதில் செல்வாக்கு செலுத்துவோம். சேரு வில, தம்பலகாமம், மொரவேவா, கிண்ணியா ஆகிய சபைகளில் தமிழர்கள் வாழும் வட்டாரங்களில் வெற்றி பெறுவோம் வெள்றிக்காக எவ்வாறான உத்திகளை கையாள உள்ளோம் என்பதனை வெளிப்படையாக கூற இயலாது எனவும்

தமிழரசுக் கட்சி அதிகார பரவலாக்கதிற்கு போராடுகின்ற ஒரு கட்சி, அந்த அடிப்படையில் உட்கட்சியிலும் அதிகார பரவலாக்கல் இருக்க வேண்டும் என்னும் நோக்கோடு, ஒவ்வொரு கோட்டத்திற்கும், தத்தம் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் சுதந்திரம் வழங்கப் பட்டது. அந்த அடிப்படையில் வட்டாரம் மற்றும் கோட்டக் கிளையினர் தெரிவுகளை மேற்கொண்டனர்.

போலி பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

என்னிடம் ஒரே ஒரு முகநூல் கணக்கு தான் இருக்கின்றது. ஆங்கில எழுத்துக்களில் கதிரவேலு சண்முகம் குகதாசன் என்னும் கணக்கு ஆகும். இதற்கு நீலச் சரி குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு எந்தக் கணக்குகளும் இல்லை. அப்படி இருந்தால் அவை போலியான கணக்குகள் ஆகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மகளிர் மற்றும் இளையோர் உரிய விகிதத்தில் இல்லாமல் இருந்திருந்தால் தேர்தல் திணைக்களம் வேட்புமனுவை நிராகரித்து இருக்கும். திருகோணமலை மாவட்டத்தில் நாங்கள் வேட்புமனு தாக்கல் செய்த 9 சபைகளது வேட்பு மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தன. இதிலிருந்தே நாங்கள் சரியான முறையில் மகளிர் மற்றும் இளையோரைத் தெரிவு செய்து இருக்கின்றோம் என நீங்கள் அறிந்து கொள்ளலாம் என மேலும் தெரிவித்தார்.

# ஷவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு மார்ச் 30

(சியாஜ்)

ஹிஜ்ரி 1446 புனித ஷவ்வால் மாத தலைப்பிறை பற்றி தீர்மானிப்பதற்கான மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 30ஆம் திகதி (ரமழான் பிறை 29) மஃரிப் தொழுகையின் பின் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தலைவர் அஷ்ஷெய்க் எம். பி.எம். ஹிஷாம் (அல் பத்தாஹி ) தலைமையில் இடம்பெறும் இம்மாநாட்டில், கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் அதன் பிறைக்குழு உலமாக்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிறைக்குழு உறுப்பினர்கள், முஸ்லிம் சமய கலாசார திணைக்கள அதிகாரிகள், இலங்கை வளிமண்டலவியல் சிரேஷ்ட அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், பிறை சம்பந்தமாக மேலதிக தகவல்களுக்கு 0112432110, 0112451245, 0777316415, தொலைபேசி இலக்கங்களில் கொழும்பு பெரிய பள்ளிவாசலுடன் தொடர்பு கொள்ள முடியும்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டலந்தை போன்ற வதைமுகாம்கள் பல வடக்கில் இருந்தன; அதை விசாரிப்பதற்கு இந்த ஆளும்தரப்பும் தயாராக இல்லை

## சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

பட்டலந்தை போன்று வடக்கில் பல வதை முகாம்கள் இருந்தன. அதை விசாரிக்க இந்த அரசாங்கமும் தயாரில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் வியாழக்கிழமை இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி மன்றங்களில் சிறப்பாக செயற்பட்டால் அதன் பின் வரும் மாகாண சபைத் தேர்தல், 5 வருடத்திற்கு பின் வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றில் சிறப்பான வெற்றியை பெற முடியும். முல்லைத்தீவில் பாரம்பரிய வைத்தியம் படித்தவர்கள் வேலை இல்லாமல் இருப்பதால் கடந்த 7 வருடமாக வேலை கிடைக்காமையால் பட்டதாரி பயிலுனர்களாக கடமையாற்றுகிறார்கள். பிரதேச சபைகள் இலசவச மருத்துவ சேவையை வழங்க வேண்டும். அதற்கு ஏற்பட்ட சட்டங்களை வகுத்து சித்த மருத்துவ நிலையங்களை உருவாக்க முடியும். அதில் அவர்களை வைத்தியர்களாக நியமிக்க முடியும்.

கட்சியை பலப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் அவசியம். அத்துடன் மக்களுக்கு சேவை வழங்க அவை முக்கியமானவை. தேர்தல் நேரம் பலர் வருவார்கள். ஆனால் கடந்த 75 வருடங்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக தியாகங்களை செய்த தாய் கட்சி ஆகிய தமிழரசுக் கட்சி சீசனுக்கு வரும் பறவைகள் அல்ல. நாம் மக்களுடனேயே இருக்கின்றோம்.

வவுனியா வடக்கு பிரதேசத்திற்கு நீர் வரவில்லை. ஆனால் மகாவலி எல் வலயம் ஊடாக பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. அதன் மூலம் திட்டமிட்ட இன பரம்பலை மாற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.



அதேபோன்று செட்டிகுளம் பிரதேசம் கீழ் மல்வத்து ஓயா திட்டத்தின் மூலம் ஆபத்தான நிலையில் உள்ளது. புதிதாக வாக்காளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். திட்டங்களை நேர்மையாக மக்களுக்காக செயற்படுத்தினால் நல்லது. ஆனால் இவ்வாறான திட்டங்களின் பின்னால் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. இதனை கடந்த கால அரசாங்கங்கள் செய்தன. தற்போதைய அரசாங்கமும் அதனையே செய்கிறது.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்களை கூட ஏற்றுக்கொள்ள இந்த அரசாங்கமும் தயாரில்லை. அண்மையில் 4 பேரை பிரித்தானியா தடை செய்தது. அதனை எமது கட்சியும் வரவேற்றுள்ளது. மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டு ஆதாரங்களுடன் இருந்த பலரில் 4 பேரை பிரித்தானியா தடை செய்துள்ளது. தற்போதைய அரசாங்கம் அந்த ஒரு தலைப் பட்சமான முடிவை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என தெரிவித்துள்ளார்கள். பட்டலந்த அறிக்கை பற்றி பேசும் அவர்கள், பல வதை முகாம்கள் வடக்கில் இயங்கின. இராணுவத்தினரிடம் கையளித்தவர்கள் உள்ளனர். அதை விசாரிக்க தயாரில்லை. அதைப் பற்றி பேச அவர்கள் தயாரில்லை.

கடந்த கால அரசாங்ககள் என்ன பதிலை தந்தார்களோ அதே பதிலை தான் இவர்களும் சொல்கிறார்கள். அவர்களது செயற்பாடுகளை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு ஒரு கால அவகாசத்தை வழங்கியுள்ளோம். பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கும் நாட்டை எடுத்துள்ளார்கள். அவர்கள் உடனடியாக மஜிக் செய்ய முடியாது. அவர்கள் பொருளாதார ரீதியாக நாட்டை மீட்டு எமது அரசியல் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். அதற்கு நாம் கால அவகாசம் வழங்கியுள்ளோம். அதனை அவர்கள் பயன்படுத்தி விரைவாக செய்ய வேண்டும். அது நடக்காவிடின் இந்த அரசாங்கத்தையும் நாம் எதிர்ப்போம். அதற்கான காலத்தை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். - என்றார். 100




# உணவகம் உட்பட ஐஸ்கிரீம் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக ரூபா 70 ஆயிரம் ரூபாதண்டப்பணம் விதிப்பு

(பாறுக் ஷிஹான்)

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற வகையில் உணவைக் கையாண்ட உணவக உரிமையாளர்கள்உட்பட ஐஸ்கிரீம்உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு எதிராக ரூபா 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு எச்சரிக்கையையும் செய்யப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் ஆலோசனைக்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் தலைமையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பல உணவகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது பலசரக்கு கடைகள் ஹோட்டல்கள் துரித உணவுக் கடைகள் ஐஸ்கிரீம் உற்பத்தி நிலையம் போன்ற சுகாதார நடை முறைகளை பின்பற்றாத உரிமையாளர்களுக்கு புதன்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில்





வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஆஜர்படுத்திய போது எதிராக தலா 25000 , 15000, 20000, 10000 ரூபா உள்ளடங்கலாக 70 ஆயிரம் தண்டப்பணம் அறவிடப்பட்டதுமின்றி எச்சரிக்கையையும் செய்யப்பட்டது.

மேலும் ஹோட்டல் ஐஸ்கிரீம் உற்பத்தி நிலைய உரிமையாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு வாரங்களுக்கு பிறகு மீண்டும் பரிசோதனை செய்யுமாறும் முன்னேற்றம் காணப்படாத விடத்து மூடுவதற்கான இறுதி உத்தரவு வழங்க நீதிவானால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மூதூரில் 36 மணி நேர தண்ணீர் வெட்டு

(ஜிப்ரான்)

மூதூரில் சில பகுதிகளில் நீர் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது. மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியபால பிரதேசத்தில் வீதி கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இதன் காரணமாக இப்பிரதேசத்தின் ஊடாக செல்லும் பிரதான நீர் குழாய்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதால் எதிர்வரும் ஏப்ரல் 02 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் ஏப்ரல் 03 புதன்கிழமை பிற்பகல் 9.00 மணிவரை சுமார் 36 மணித்தியாலங்கள் நீர் வினியோகம் தடைப்படும் என்பதை பாவனையாளர்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறியத்தருகிறன்றது.

எனவே நீரை சேமித்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறோம்.

# கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதிப்பொலிஸ்மா அதிபராக சந்திரசேன

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக ஜெ.ஏ. சந்திரசேன தனது கடமைகளை நேற்று (வெள்ளிக்கிழமை) பொறுப்பேற்றார்.

இரணைமடு சந்தியிலுள்ள அலுவலகத்தில் தனது கடமைகளை சர்வமத வழிபாட்டுடன் பொறுப்பேற்றார்.

ஏற்கனவே கடமையாற்றிய பிரதிப்பொலிஸ்மா அதிபர் சமந்த டீ சில்வா பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டதைத்தொடர்ந்து. ஜெ.ஏ சந்திரசேன கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட நிலையில் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்.

ஜெ.ஏ சந்திரசேன இதற்கு முன்பு கழுத்துறை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளராக கடமையாற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 316





# உலக வங்கிப் பிரதிநிதிகள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநருக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.





இச் சந்திப்பில், கிழக்கு மாகாணத்தில் பொருளாதார மேம்பாட்டிற்காக உலக வங்கியால் செயற்படுத்தப் படக்கூடியசாத்தியமான திட்டப்பகுதிகள் குறித்து நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் சுற்றுலாத் துறை , விவசாயம், மீன்பிடி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் குறித்து முக்கியமாக மேலும் விரிவாக பேசப்பட்டது.





காலைக்கதிர் Kalaikkathir

## மாளிகைக்காடு பிரதேச பள்ளிவாசல்களில் கடமையாற்றும் கதீப் முஅத்தின்மார்களுக்கான உலருணவு பொதி வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேச பள்ளிவாசல்களில் கடமையாற்றும் முஅத்தின் மற்றும் இமாம்களுக்கு ஸீறா பவுண்டேசன் ஸ்ரீலங்கா அமைப்பால் 12 ஆவது வருடமாக அமைப்பின் சர்வதேச மற்றும் உள்ளூர் நல்லுள்ளங்களின் நிதியுதவியின் பங்களிப்புடன் ஒரு தொகை உலர் உணவு பொதிகள் ஜம்மிய்யத்துல் உலமா சபையின் சாய்ந்தமருது மாளிகைக்காடு கிளை காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.







இந்நிகழ்வானது அமைப்பின் ஸ்தாபகரும், ஒருங்கிணைப்பாளருமான யூ.கே. காலித்தீனின் தலைமையிலும், அமைப்பின் பணிப்பாளர் சபையின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜம்மிய்யத்துல் உலமா சபையின் செயலாளருமான அல் ஹாபில் அஷ்ஷெய்க் மௌலவி நப்றாஸ் ஹனிபா (ரஹ்மானி) அவர்களின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்றது.

நிகழ்வில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜம்மிய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி எம்.எம். சலீம் (ஷர்க்கி), சாய்ந்தமருது நம்பிக்கையாளர் சபையின் இடைக்கால சபை தலைவர் வைத்தியர் சனுஷ் காரியப்பர், சாய்ந்தமருது மாளிகைக்காடு கதீப் முஅத்தின் சம்மேளனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ. ஆதம்பாவா (ரசாதி) கதீப் முஅத்தின் சம்மேளத்தின் உறுப்பினர்கள், ஸீறா பவுண்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உலமா சபையின் சிரேஸ்ட உறுப்பினரும், மாவடிப்பள்ளி சஹ்றி அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் மௌலவி ஐ.எம். ரஹ்பி (ஹிழ்ரி) அவர்களால் காலத்தின் தேவையும், முஅத்தீன் கத்தீப்மார்களின் முன்மாதிரியும் எனும் தொனிப்பொருளில் விசேட சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பிரியாணிப் பொதி வழங்கியது ஊழியர் சங்கம்

(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், புனித ரமலானை முன்னிட்டு தலைவரின் முயற்சியின் காரணமாக மூன்று வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருந்தது. அந்த வரிசையில் மூன்றாவது திட்டமான முஸ்லிம்களது நோன்புப் பெருநாள் உட்பட தமிழ் சிங்கள ஊழியர்கள் தாங்களது பெருநாள் தினத்தில் பிரியாணி உண்டு பெருநாள்களை மகிழ்வுடன் கழிக்கும் விதத்தில் பிரியாணி அரிசி பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை ஊழியர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.






ஊழியர் சங்கத்தின் நலன்புரி செயலாளர் ஏ.ஆர்.எம். ஷியாமின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சங்கத்தின் தலைவர் சி.எம். அஹமட் முனாஸ் பிரதம அதிதியாகவும் செயலாளர் எம்.எம். முகமது காமில் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு ஊழியர்களுக்கு பொதிகளை வழங்கி வைத்தனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஈத்தம்பழம் இறைச்சி என்பனவும் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இங்கு கருத்து தெரிவித்த தலைவர் முனாஸ், இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர், அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி அஷ்செய்க் எம்.எச்.ஏ. முனாஸ் ஆகியோருக்கும் விசேடமாக உதவிகளை வழங்கிய நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்வின்போது ஊழியர் சங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

## பொதுப் போக்குவரத்து நடைமுறைகளை சீர்செய்வதற்குக் கல்முனையில் ஏற்பாடு

(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரை புத்தாண்டுகளை முன்னிட்டு கிளின் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொதுப் போக்குவரத்து நடைமுறைகளை சீர்செய்யும் நடவடிக்கை ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்முனை பஸ் நிலையம், பொது நூலகம், அம்மன் கோவில் வீதி, தாளவட்டுவான் சந்தி, நற்பிட்டிமுனை, புறநகர் பகுதி, கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை ஆதார வைத்தியசாலை, வங்கிகள், தனியார் நிறுவனங்கள், கல்முனை மாநகர பகுதிகள், கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை பகுதி, கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதி ஆகியவற்றில் சட்டவிரோதமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் உட்பட பாதசாரிகளுக்கு இடையூறாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத விளம்பர பலகைகள் மற்றும் படிக்கட்டுக்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்டதுடன் ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகள் யாவும் அண்மையில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி கிழக்கு மாகாண புதிய சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தர கலந்துரையாடலின் பின்னர் கல்முனை பிராந்தியத்தில் கட்டம் கட்டமாக உரிய திணைக்களங்கள், கல்முனை மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து பொதுப் போக்குவரத்து நடைமுறைகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமூத்திர ஜீவவின் கண்காணிப்பின் கீழ் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க ஆலோசனைக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி நஸீர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இப்பகுதிகளில் பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் புதிய கட்டுப்பாடுகளை அமுல்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர கடந்த காலங்களில் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாடசாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் மாணவ மாணவிகள் ஆசிரியர்களின் போக்குவரத்து சிரமங்களை தவிர்ப்பதற்காக போக்குவரத்தை சீர்செய்வதற்கு அண்மைக்காலமாக கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளளன.





## போர் முடிந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கும் இந்த சூழலில், ஒருதரப்பினர் மாத்திரம் இலக்கு வைக்கப்பட்டு அவர்கள் மீது தடை விதிக்கப்படுவது பொருத்தமானதல்ல. முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமல் இவ்வாறானநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையானது தேசிய ரீதியில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

தேசியரீதியில் இடம்பெற்றபிரச்சினைகளில் சர்வதேசத்தின் தலையீடுகள் அனுமதிக்கப்படக் கூடாது. இப்போது ஓரிருவருக்கு விதிக்கப்படும் தடைகள் இனிவரும் காலங்களில் நாட்டுக்கு எதிரானதாகக்கூட மாற்றமடையக் கூடும். எனவே இந்த விவகாரம் இராஜதந்திர மட்டத்தில் மிகவும் தீர்க்கமாக அணுகப்பட வேண்டியதாகும். எந்த வகையிலும் தேசிய ரீதியிலான பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தக்கப்படக்கூடாது.

இதற்கு முன்னரும் அமெரிக்கா போன்ற நாடுகளால் இவ்வாறு படையினருக்கு எதிராகத் தடை விதிக்கப்பட்ட போதும், அனைத்து இன மக்களும் இணைந்து இலங்கையர்கள் என்ற ரீதியில் அதற்குப் பதிலளித்தனர். அப்போதைய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமும் தேசிய ரீதியில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறுதான் வலியுறுத்தியிருந்தார்.

மனித உரிமைகள் பேரவையிலும் இது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தன. எமது ஆட்சிக் காலத்தில் இது குறித்த வேலைத்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருந்தோம். அந்த வகையில் நிலையான கொள்கைத் திட்டங்களின்கீழ் உள்நாட்டுப்பொறிமுறையின் கீழ் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணப்பதற்கு தற்போதைய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

## இளைஞர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்கள் வேலையின்றி உள்ளனர். பல அரச பணியிடங்களில் இவர்களுக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் இவர்களுக்கானநியமனங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு சுகாதாரத்துறையில் அத்தியாவசியமான பல பதவிகள் இருந்தாலும் தகுதிகள் இருந்தும் வேலை வழங்கப்படவில்லை எனவே தகுதிக்கு ஏற்ப வேலை வழங்குமாறு வீதிக்கு வந்து போராட்டம் நடத்திய போது கைது செய்யப்பட்டுள்ளனர். எதிர்ப்பு தெரிவிக்கும் ஜனநாயக உரிமையைக்கூட இன்றைய இளைஞர்கள் இழந்துள்ளனர்

பல தசாப்தங்களாக மக்கள் விடுதலை முன்னணியினர்தலைமையிலானதிசைகாட்டி காண்பித்தஒருவேலைத்திட்டம்காணப்பட்டது. தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பு, தனியார் பல்கலைக்கழகங்களுக்கு எதிர்ப்பு, சர்வதேச நாணய நிதிய (ஞானிய்) உடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை இல்லை, இந்திய சீன அமெரிக்க மற்றும் மேற்கத்திய விரிவாக்கம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு எதிராக போராட்டங்கள், சோசலிச வெறியால் இளைஞர்களை ஆகர்ஷித்து, மாணவர்களை வீதிக்கு இறக்கி அவர்களது கல்வியை சீர்குலைப்பது, உழைக்கும் மக்களை போராட்டங்களுக்கு கொண்டு வந்து பொருளாதாரத்தைச் சேதப்படுத்துவது, உயிர்களையும் உடைமைகளையும்கூட அழிப்பது போன்ற பல நோக்குகளையும் வேலைத்திட்டங்களையும் கொண்டிருந்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்து முற்றிலும் வேறு வகையிலானநடவடிக்கைகளைமுன்னெடுத்து வருகின்றனர்.

இனந்தெரியாத ஆயுததாரிகளால் கொடூரமாக கொல்லப்படும் கலாசாரத்தை சமூகமயப்படுத்திய இக்குழுவினர், அதிகாரம் கிடைத்தும் மக்கள் பிரச்சினைகளுக்கு பதில் வழங்க முடியாமல் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க முடியாமல், இன்று இந்த ஆளும்தரப்பு ஸ்தம்பித்துள்ளது. அன்று மேடையில் வாக்களித்த டொலர் பொழிவுக்கு என்ன நடந்ததெனத் தெரியாது.

அந்த டொலர்கள் கிடைத்தபாடில்லை. தாம் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளில் வசிக்கும் நமது சகோதரர்கள் மில்லியன், பில்லியன் கணக்கில் பணத்தை நாட்டுக்கு அனுப்புவார்கள் என்று கூறினர். இவ்வாறு எந்த டொலரும் வரவில்லை. அன்று நாணய நிதியத்தை விமர்சித்தவர்கள் இன்று அதன் தாளத்திற்கு ஆடுகின்றனர் – என்றார்.

## மகாவலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு தற்போது தங்களது அரசியல் தொடர்பான கொள்கையையே வெளிப்படுத்தி வருகிறது என்பது எங்களுக்குப் புரிகிறது. கடந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, அந்தக் காலத்தில் இந்த நிறுவனங்களை முன்னெடுத்துச்செல்ல முடியுமானதனியார்நிறுவனங்கள் இல்லாமல் இருந்தமையால் ஆளும்தரப்புத் தலையிட்டு இதனை முன்னெடுத்துச்செல்ல வேண்டி ஏற்பட்டதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார். அப்படியானால் தற்போது இந்த துறைகளில் தனியார் துறையினருக்கு இடமளிக்கவே ஆளும்தரப்பு எண்ணி இருக்கிறது. அதன் முதற் கட்டமாகவே மார்ச் 17 மீளாய்வு அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையின் பிரகாரம் அரசாங்கம் சில நிறுவனங்களை முற்றாக மூடிவிடவும் சில நிறுவனங்களை அரச மற்றும் தனியார் பங்களிப்புடன் வழங்கவும் மேலும் சில நிறுவனங்களை தனியார் மயமாக்கவுமே எதிர்பார்க்கிறது.

மீளாய்வு அறிக்கையில் மகாவலி அதிகாரசபை தொடர்பில் முன்வைத்திருக்கும் பரிந்துரைதான் மிகமுக்கியமானது. அது முற்றாக நீக்கப்படவேண்டும். நல்லாட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் இவ்வாறானதொரு பிரேரணையை கொண்டுவந்ததை நாம் நினைவுகூருகின்றோம்.

மகாவலி அதிகார சபையில் சுமார் 3800 பணியாளர்கள் உள்ளனர். அந்த எண்ணிக்கையை குறைத்து சில பகுதிகளை தனியாருக்கு ஒதுக்கவே ரணில் விக்ரமசிங்க பரிந்துரைத்தார். தற்போது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு அதற்கு அப்பாலும் சென்று மகாவலி நிறுவனத்தை முற்றாக மூடிவிடவே முயற்சித்து வருகிறது. இந்தத் தீர்மானத்தால் மகாவலி யோசனை திட்டத்துக்கு சொந்தமான 210,105 விவசாய குடும்பங்கள் இடம்பெயர இருக்கின்றன.

அத்துடன் இந்த ஆய்வு அறிக்கையில் நெல் சந்தைப்படுத்தல் சபையை தனியாரிடம் ஒப்படைத்தல். முந்திரி கூட்டுத்தாபனத்தை கலைத்தல் மற்றும் அதன் நிலத்தை விற்பனை செய்தல். அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனத்தை முழுமையாக மூடுவது போன்ற பல முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்றார்.

# நியாயமான தேர்தலை நடத்த மக்கள் ஒதுழைக்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணையர் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. நியாயமானதும் சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தல் சட்டங்களுக்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்;.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் ஏப்ரல் மாதம் 7 ஒவ்வொரு மாவட்ட செயலகங்களுக்கும் விநியோகிக்கப்படும். இதற்கமைய ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு நடைபெறும்.

22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் வாக்களிக்கதவறும் அரசஉத்தியோகஸ்த்தர்கள் 28 மற்றும் 29 ஆகிய இருதினங்களில் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் வாக்களிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே தபால்மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றுள்ள அனைத்து அரச உத்தியோகஸ்த்தர்களும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

2023ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் அதிகார சபைகளில் உள்ள மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பின் அளவு ஆகிய அடிப்படைக் காரணிகளைக் கருத்திற்கொண்டு வேட்பாளர் ஒருவர் வாக்காளர் ஒருவருக்குச் செலவு செய்யகூடிய தேர்தல்பிரசார செலவுதீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய குறைந்த தொகையாக மன்னார் பிரதேச சபைக்கு 74 ரூபாய், கூடிய தொகையாக லாஹுகல பிரதேச சபைக்கு 164 ரூபாய் என்ற அடிப்படையில் தேர்தல் பரப்புரைக்கான தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேச சபைக்கும் ஒதுக்கப்படும் செலவுத் தொகையில் 50 சதவீதத்தை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் செலவழிக்க வேண்டும், 30 சதவீதத்தை அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு செலவழிக்க வேண்டும், 20 சதவீதத்தை மேலதிக பட்டியலில் உள்ள வேட்பாளர் செலவழிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் தேர்தல் பரப்புரை செலவினத் தொகையை சமர்ப்பிக்காதவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் தமது செலவினத் தொகை தொடர்பான குறிப்புக்களை வைத்துக்கொள்ள வேண்டும். சரியான ஆவணங்களுடன் விபரங்களை சமர்க்கிப்ப வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன.நியாயமானதும்இசுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தல் சட்டங்களுக்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

### மாகாண சபைகளிலிருந்து

# காணாமற்போன வாகனங்களை தேடும் விசாரணைகள் தொடக்கம்

மாகாண சபைகளுக்கு சொந்தமான காணாமல் போயுள்ள வாகனங்கள் தொடர்பில் தேடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதியமைச்சர் ருவான் செனரத் தெரிவித்தார்.

காணாமற்போன வாகனங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

"மாகாண சபைகளுக்குச் சொந்தமான நிறுவனங்களின் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட வாகனங்கள் சில காணாமல் போயுள்ளன என்று தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் இந்த

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# இப்தார் நிகழ்வுகள்

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு ஒன்று வியாழக்கிழமை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கற்பிட்டி பிரதேச செயலாளர் பீ ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி, மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.ஏ.எம் றிபாத், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மர்ஜானா, நிர்வாக கிராம உத்தியோகத்தர் பீஎம்.எம் பைனஸ் மற்றும் கலாசார உத்தியோகத்தர் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் இவ் இப்தார் நிகழ்வில் மௌலவி மிக்தாதின் விஷேட பார்க்க சொற்பொழிவும் இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



செண்ட்ரல் கேம்ப் வைஎம்.எம்.ஏ அமைப்பின் வருடாந்த இப்தார் நிகழ்வும் ஒன்று கூடலும் கிளை காரியாலயத்தில் 2025.03.26 ஆம் திகதி புதன்கிழமை அதன் தலைவர் வை.பி.ஏ.சுல்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எம்.ஐ.நௌபர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக முன்னாள் மாவட்ட பணிப்பாளரும் முன்னாள் செயற்திட்ட தவிசாளருமாகிய கே.எல்.சுபைர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இந்நிகழ்வில் செண்ட்ரல் கேம்ப் வை.எம்.எம்.ஏ அமைப்பின் தலைவராக இருந்து செயற்பட்டு மரணித்த ஏ.எம்.அன்சார் மௌலவியை நினைவு கூர்ந்து விஷேட துவா பிரார்த்தனையும் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து பிரதம அதிதி மற்றும் விஷேட அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றதோடு இராப்போசன விருந்தும் குழு புகைப்படமும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்காவின் பணிப்பாளரும் வை.எம்.எம்.ஏ. மாவடிப்பள்ளி கிளையின் தலைவருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் அமைப்பின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஐ.எல்.எம். இர்பான், தேசிய மாணவர் சிப்பாய்கள் படையணியின் 17 ஆவது படைப்பிரிவின் பயிற்சி அதிகாரி கேப்டன் எம்.டி. நௌஷாட், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம். றியாஸ், ஆசிரியர் மேஜர் கே.எம். தமீம், ஆசிரியர் கேப்டன் எம்.ஷிப்லி, கல்முனை பிரதேச செயலக மூர்த்தி முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், சாய்ந்தமருது இளைஞர் சேவை பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி எம்.ரீ.எம். ஹாரூன், அம்பாறை மாவட்ட வை.எம்.எம்.ஏ. கிளைகளின் தலைவர்கள், அக்கரைப்பற்று - கல்முனை சாரணிய பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாநகர பரப்புரைகள்

கொழும்பு மாநகர சபை தேர்தலில், மரச் சின்னத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகாவத்த- கெத்தாராம வட்டாரத்திற்கான பிரசாரக் கூட்டமொன்று வேட்பாளர்களான ரியாஸ் கபூர், பரூன், சமீர் ஆகியோரின் ஏற்பாட்டில் ,புதன் கிழமை இரவு ,கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.





அதில் முன்னாள் கல்முனை நகரபிதா சிராஸ் மீராசாஹிப் கட்சியின் கொழும்பு நகரபிதா வேட்பாளரும், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும், கொழும்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளருமான அர்ஷாத் நிசாம்தீன், முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அனஸ் ஆகியோர் உட்பட கட்சியின் மாநகர சபைக்கான வேட்பாளர்களும், ஆதரவாளர்களும், பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் இறுதியில் மாளிகாவத்தை ஜும்ஆ மஸ்ஜித் வீதியினூடாக ஊர்வலமாகச் சென்றபோது மக்கள் வரவேற்பளித்தனர்.

# கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் ரம்மிய இல்லம் உளநலப் பிரிவு திறப்பு




(ஹஸ்பர்)

கிண்ணியா தள வைத்தியசாலையில் உளநல சிகிச்சைக்காக, 'ரம்மிய இல்லம்' என்ற பெயரில் பிரிவொன்று புதன்கிழமை புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரிவு கிண்ணியா தள வைத்தியசாலையின், வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் டி.எச். நயானா சந்திரதாசவால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப் பிரிவுக்கான பொறுப்பதிகாரி வைத்தியர் ஏ.கே.எம்.நஸ்மி உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# கிண்ணியாவில் கடந்த ஆண்டு 71 பேர் தற்கொலைக்கு முயற்சி

## உளநல ஆரோக்கிய வைத்தியர் நஸ்மி தகவல்

(ஹலால்தீன்)

கிண்ணியா பிரதேசத்தில், 2024 ஆம் ஆண்டு, தங்களை தாங்களே பல முறைகளில், துன்புறுத்தி தற்கொலை செய்ய முயற்சித்த 71 பேர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறார்கள் என கிண்ணியா தள வைத்தியசாலையின் உளநல ஆரோக்கிய வைத்திய அதிகாரி ஏ.கே.எம்.நஸ்மி தெரிவித்தார்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் உளநல சிகிச்சைக்காக, 'ரம்மிய இல்லம்' என்ற பெயரில் பிரிவு ஒன்று புதன்கிழமை புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரிவு, வைத்தியசாலையின், வைத்திய அத்தியேட்சகர் நயன சந்திரதாசவால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் அவர் கூறுகையில் -

இவ்வாறு உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் 20 தொடக்கம் 22 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும், அவர்கள், இன்றைய நவீன சூழலால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களே!

அத்துடன்போதைபொருள்பாவனை,இளம்வயது திருமணத்தில் பின்னர் ஏற்படுகின்ற பிரச்சினைகள், சமூக ஊடகங்களின் தாக்கங்கள் இவர்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

கிண்ணியா பிரதேசத்தைப் பொறுத்தவரை, 2021 ஆண்டை விட, 2024 ஆண்டு உளநல சேவையை பெற எமது பிரிவுக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

2021 ஆண்டு 40 பேர் இங்கு சிகிச்சை பெற வந்தனர். 2024 ஆண்டு, 130 இற்கும் மேற்பட்டவர்கள் தாமாக முன்வந்து சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

விஞ்ஞான ரீதியாக சிகிச்சை அளித்து, உளநலம் பாதிக்கப்பட்டவர்களை குணமாக்க முடியும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இந்த விடயம் ஒரு மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

மனநிலைபாதிக்கப்பட்டவர்கள் தாமாக முன்வந்து சிகிச்சை பெறுவதற்காகவே அந்த பிரிவை தற்போது நாங்கள் ரம்மிய இல்லமென மாற்றியிருக்கிறோம்.




எனவே, இவ்வாறான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களை முன்கூட்டியே அவதானித்து, இங்கு கொண்டு வந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் அவர்களை, குணமாக்க முடியும் என்பதை பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதோடு, பாடசாலைகளும் இதனை அறிந்திருப்பது அவசியமாகும் என்றும் அவர், மேலும் தெரிவித்தார்.








# பெண்கள் சட்ட விடயங்களிலுள்ள இடைவெளி சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுதல்வேண்டும்

## கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு உரிமைகள் சமத்துவம் வலுவூட்டல் எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளீர் தின வட்டமேசை கலந்துரையாடல் நிகழ்வு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை மண்டபத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது அங்கு உரையாற்றிய அவர் -

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பதில் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற சுதந்திரமான ஒரு நிறுவனமாகும். பெண்களின் சட்ட விடயங்களில் உள்ள இடைவெளிகள் சட்டரீதியாக பாதுகாக்கப்படவேண்டிய தேவை உள்ளது என்பதால் இது தொடர்பாக துறை சார்ந்த வல்லுநர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அது பற்றி பொதுமக்களின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டு இச்சட்ட திருத்தங்களையும் புதிய சட்டங்களையும் கொண்டு வருவதற்காக பரிந்துரைகளை செய்யவேண்டிய கடற்பாட்டிற்கு உள்ளாகின்றது என்பதால்தான் இவ் வட்டமேசை கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கூறினார்.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்சிரேஷ்ட விரிவுரையாளர்கலாநிதி ஏ.டபிள்யூ.என்.நளீபாவிசேட சொற்பொழிவாற்றினார். கல்முனை பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி ஆகியோர் பெண்கள் தொடர்பிலானசட்ட இடைவெளிகள் பற்றியும் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டிய தேவை பற்றியும் கருத்துரை வழங்கினார்கள்.










அதன்படி குடும்பவன்முறைசட்டம் தனியார் சட்டம் வேலைத்தளங்களில் பெண்களுக்கெதிரான நடைபெறும் பாலியல் தொந்தரவு உள்ளுராட்சி சபைகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் சமூக வலைதளங்களில் பெண்களை இழிவுபடுத்துதல் பெண்களின் தொழில் உரிமைகள் பெண்களுக்கான விசேட பாதுகாப்பு போன்ற விடயங்கள் சபையில் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் அரச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் சிவில் மக்களும் கலந்து கொண்டனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் சுமார் 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

## காலாவதியான பொருள்கள் விற்பனை செய்தமைக்காக

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் பழுதடைந்த அரிசியை கர்ப்பிணி தாய்மாருக்கு விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற முறைபாட்டின் அடிப்படையில், வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன், விசுவமடு பொது சுகாதார பரிசோதகர் சந்திரமோகன், உடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் ஆகியோர் இணைந்து புதுக்குடியிருப்பு மற்றும் வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போதுதிகதிகாலாவதியான700கிலோ அரிசி, பிஸ்கட் பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டன. குறித்த பிரபல விற்பனை நிலையம் உரிமையாளர்களிற்கு எதிராக வெள்ளி கிழமை மேலதிக நீதிவான் நீதிமன்றில் வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் மற்றும் புதுக்குடியிருப்பு பொது சுகாதார பரிசோதகர் சந்திரமோகன் ஆகியோரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்குகள் நேற்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன் போது உரிமையாளர்களை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் 35,ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.



# தேசிய மக்கள் முன்னணியை பதிவு செய்வதற்கு விண்ணப்பம்



(அபு அலா)

இலங்கையில் தேசிய ரீதியாக உருவெடுக்கும் புதிய கட்சியான தேசிய மக்கள் முன்னணி கட்சியை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை கட்சியின் தேசிய தலைவர் பொறியியலாளர் அல்-ஹாஜ் உதுமான்கண்டு நாபீர் தேர்தல் ஆணைக்குழுவில் வெள்ளிக்கிழமை கையளித்து வைத்தார்.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.நௌஷாட் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான சட்டத்தரணி எம்.எஸ்.துல்கர்நயீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2025இல் வெளியிடப்பெற்றது